# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

## முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,

## மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்

திருவள்ளுவர் 2056 ஆண்டு விசுவாவசு வருடம், மாசி 27 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.105/2025**

CNR.No.TNCB17-000132-2025

பழனியம்மாள், க/பெ . நஞ்சப்ப கவுண்டர், இந்து,

வயது 86, வசிப்பிடம் பச்சாகவுண்டம்பாளையம்,

பல்லடம் தாலுக்கா. ... **வாதி**

//எதிர்//

1. அன்னப்பூரணி, க/பெ. மந்திரியப்ப கவுண்டர், இந்து,

வயது 54, வசிப்பிடம் பச்சாகவுண்டம்பாளையம்,

பல்லடம் தாலுக்கா.

2. வள்ளியம்மாள், க/பெ. பழனிசாமி, இந்து, வயது 48,

வசிப்பிடம் மூங்கில்தொழுவு, உடுமலை தாலுக்கா.

3. வேலுமணி, க/பெ. கருப்புசாமி, இந்து, வயது 31,

வசிப்பிடம் பச்சாகவுண்டம்பாளையம்,

பல்லடம் தாலுக்கா.

4. கருப்புசாமி, த/பெ. பழனிசாமி, இந்து, வயது 29,

வசிப்பிடம் பச்சாகவுண்டம்பாளையம்,

பல்லடம் தாலுக்கா. ... **பிரதிவாதிகள்**

வழக்கு 1ம் அயிட்ட சொத்தை நான்கு சம பங்குகளாகப் பிரித்து, அதில் ஒரு பங்கை வாதிக்கு தனியாக ஒதுக்கி, வாதியின் சுவாதீனத்தில் வைத்து அனுபவிக்க பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டியும், வழக்கு 2ம் அயிட்ட சொத்தை மூன்று சம பங்குகளாகப் பிரித்து, அதில் ஒரு பங்கை வாதிக்கு தனியாக ஒதுக்கி, வாதியின் சுவாதீனத்தில் வைத்து அனுபவிக்க பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டியும், வழக்கு 3ம் அயிட்ட சொத்தை ஆறு சம பங்குகளாகப் பிரித்து, அதில் ஒரு பங்கை வாதிக்கு தனியாக ஒதுக்கி, வாதியின் சுவாதீனத்தில் வைத்து அனுபவிக்க பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டியும், முதல்நிலை தீர்ப்பாணை கோரியும், வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் : 23.12.2009

வழக்கு மூலம் எழுந்த நாள் 17.08.2008, 19.12.2009 தாளக்கரை கிராம் இந்நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்காகவும், நீதிமன்ற கட்டணமாகவும் கீழ்கண்டவாறு வாதி தாவா மதிப்பிடுகிறார்.

**<u>மதிப்பீட்டு விவரம்</u>**

| | |
|---|---|
| தாவா 1ம் அயிட்ட சொத்தின் மொத்த மதிப்பு | ரூ. 1,00,000/- |
| வாதியின் ¼ பங்கிற்கான மதிப்பு | ரூ.25,000/- |
| தாவா 2ம் அயிட்ட சொத்தின் மொத்த மதிப்பு | ரூ. 75,000/- |
| வாதியின் 1/3 பங்கிற்கான மதிப்பு | ரூ.25,000/- |
| தாவா 3ம் அயிட்ட சொத்தின் மொத்த மதிப்பு | ரூ. 2,40,000/- |
| வாதியின் 1/6 பங்கிற்கான மதிப்பு | ரூ.40,000/- |
| வாதியின் மொத்த பங்கிற்கான மதிப்பு | ரூ.90,000/- |

தாவா மதிப்பு நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்காகவும், நீதிமன்ற கட்டணத்திற்காகவும் ரூ.90,000/-க்கு ரூ.500/- தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீடு திருத்தப்பட்ட சட்டம் 2003 பிரிவு 37(ii) ன் கீழ் கட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.செல்வம், அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.P.சுரேஷ்குமார், அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.R.R.சிபாசந்தர், அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வாதி கோரிய பரிகாரத்தை வழங்குவதற்கு ஆட்சேபணை இல்லை என்று குறிப்பாணை தாக்கல் செய்தும், 4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சின்னச்சாமி, அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்பாணை

1). வழக்கு 1முதல் 3 அயிட்ட சொத்தை மூன்று சம பங்குகளாகப் பிரித்து, அதில் ஒரு பங்கை வாதிக்கு தனியாக ஒதுக்கி, வாதியின் சுவாதீனத்தில் வைத்து அனுபவிக்க முதல் நிலை தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2). செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

## செலவு தொகை பட்டியல்

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

# Description of Property

**அயிட்டம் - 1:**

பல்லடம் தாலூக்கா, பல்லடம் சார்பதிவாளர் உப பதிவு மாவட்டம், தாளக்கரை கிராமம்,

க.ச.எண்.210/2 ஏ-ல் **ஹெக்** 0.48.50 ம்

க.ச.எண்.214/10-ல் **ஹெக்** 0.01.00 ம்

க.ச.எண்.214/3-ல் **ஹெக்** 0.83.00 ம்

க.ச.எண்.214/5-ல் **ஹெக்** 0.35.00 ம்

க.ச.எண்.214/8-ல் **ஹெக்** 0.22.00 ம்

இந்த விஸ்தீரணமுள்ள பூமியும், இதில் உள்ள கிணற்று உரிமைகளும், இதில் உள்ள மின் இணைப்பு மோட்டார் வகையராவில் உள்ள உரிமைகளும், மேற்படி பூமியில் உள்ள கட்டிடங்களும், இதில் உள்ள மின் இணைப்புகளும், பி.ஏ.பி மற்றும் வாய்க்கால் பாத்தியங்களும், மாமூல் தட பாத்திய உரிமைகளும், மாவடை மரவடை சகிதம்.

**அயிட்டம் - 2 :**

பல்லடம் தாலூக்கா, பல்லடம் சார்பதிவாளர் உப பதிவு மாவட்டம், தாளக்கரை கிராமம், க.ச.எண்.214 நெ.ஏ.9.06 ல் பொது ஏ.1.00-2/3 ம் கிணர் மோட்டார் வகையராவில் 1/9 பங்கும், தென்னைமரம் 3 ல் 1 ம், க.ச.எண்.210/2 காலையில் ஏ.5.25 ல் மேல்கோட்டில் தென்வடலாக பாதி ஏ.2.12 ½ ல் பொது ஏ.0.29-1/6 ம். இந்த பூமிகளுக்கான மாமூல் வழிநடை மாவடை, மரவடை, பி.ஏ.பி. பாத்தியமும் சகிதம்.

**அயிட்டம் - 3 :**

திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் உபபதிவு வட்டம், பல்லடம் வட்டம் சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குச் சேர்ந்ததும் மலப்பாளையம் ஊராட்சி

மன்ற எல்லைக்குட்பட்டதுமான ஷை மலப்பாளையம் கிராமத்தில் க.ச.351 நெ.காடு பு.ஏ.12.56 க்கு த. ரூ. 14.12 இதில் பொன்னுசாமி 1. சாமிநாதன் 2 இவர்களுடைய பங்கு பூமிக்கும் கிழக்கு, செல்லிமுத்து கவுண்டர் என்பவர்க்கு பாத்தியப்பட்ட தென்வடல் தடத்துக்கும் மேற்கு, கிழமேல் இட்டேரிக்கும் தெற்கு, ஷை செல்லிமுத்துக்கவுண்டர் பூமிக்கும் வடக்கு, இதன் மத்தியில் பு.ஏ.4.00 க்கு தரம் ரூ.4.48 ம் உள்ள இந்த பூமி பூராவும். இதற்கு உரிய மாமூல் வழிநடை தட பாத்தியமும் ஆக இவைகள் பூராவும் சகிதம். இதன் தனிப்பட்டா எண். 933 என்றும் ஷை பூமியானது புதிய உட்பிரிவின்படி க.ச.351/3C ல் உள்ளது.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம்11-ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர், அசல் வழக்கு எண்.105/2025

தீர்ப்பாணை

நாள்: 11.03.2026